மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு ஏரியைப் பொறுத்தமட்டில் படகுக் குழாம் அமைப்பது ஒரு பெரிய வேலை இல்லை. படகுக் குழாம் அமைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். பயணிகள் அதிகமாக வந்தால் தொடர்ந்து அது நிறைவேற்றப்படும். பயணிகள் வருகைக் குறைவின் காரணமாகத்தான் முதலியார்குப்பம் பகுதிக்கு மாற்றப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், அதிக பயணிகள் வருவதாக இருந்தால், அதைக் கருத்தில்கொண்டு பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

ஆய்வுக் கூடம்

***31019—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, ஈத்தாமொழி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குளச்சல் தொகுதி, ஈத்தாமொழி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்ட நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திட்டம் 10-ல் விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.*

திரு. எஸ். ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈத்தாமொழி அரசு மேல்நிலைப் பள்ளி கிராமப்புற மாணவர்கள் படிக்கக்கூடிய ஒரு பள்ளி.*

2008 நவம்பர் 13]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று நபார்டு நிதி ஒதுக்கீட்டில் அந்தப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு, சமீபகாலத்தில் அந்த ஆய்வுக் கூடம் திறக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆய்வுக் கூடத்தில் தாவரவியல் மற்றும் உயிரியல் பிரிவுக்கான உபகரணங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. அவை விரைவில் வழங்கப்படுமா என்பதை நான் கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் 483 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் அதிகமான மாணவர்கள் அந்தப் பள்ளியில் படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்தப் பள்ளியின் பிரதான கட்டடமாக பழமைவாய்ந்த ஓடு வேய்ந்த ஒரு கட்டடம் அமைந்திருக்கிறது. அந்தக் கட்டடத்தைப் புதிய கட்டடமாகக் கட்டி முடிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிறபோதுகூட அந்தப் பள்ளியில் இந்தப் பணி பத்தாவது நபார்டு திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னேன். ஏற்கெனவே அங்கே இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வகங்கள் ஆகிய இரண்டு ஆய்வகங்கள்தான் இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு கட்டப்பட்டிருக்கின்றன. Biology Lab—அங்கே விலங்கியல் மற்றும் தாவரவியல் பிரிவுகளுக்கான அந்த ஆய்வகம் இன்னும் கட்டப்படவில்லை. அது இந்த பத்தாவது திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்போது, அந்தப் பள்ளியிலே தேவையிருக்கக்கூடிய 4 வகுப்பறைக் கட்டடங்களையும் இணைத்து நபார்டு பத்தாவது திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் தக்கலை கல்வி மாவட்டத்திற்குட்பட்ட

[2008 நவம்பர் 13

பெருவிளை அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடந்த ஆண்டு கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆண்டாவது அது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே கல்வி வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் ஏராளமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக சீருடை, இலவசமாக பள்ளிப் பாடப் புத்தகங்கள், இலவச பேருந்து வசதி, இலவச மிதிவண்டிகள் வழங்குவது என்று இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இருந்தாலும், பல்வேறு பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் அமர்வதற்குப் போதுமான இருக்கை வசதிகள் இல்லை. எனவே, வருகின்ற காலத்தில் அரசு இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்கின்ற அளவிற்கு, மாணவர்கள் அமர்வதற்கு இருக்கை வசதிகள், டெஸ்க் போன்ற வசதிகளை செய்து தருவதற்கான உத்தேசம் அரசிடம் ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவிளை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய கோரிக்கையை, வரக்கூடிய நிதியாண்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல பள்ளிகளிலே பெஞ்சுகள், டெஸ்குகள் இல்லை என்ற ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அவையிலே பல முறை நான் சொல்லியிருக்கிறேன்; நீங்களும் அறிவீர்கள். முதன்முறையாக நபார்டு வங்கியிலே அதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்று, இந்த அரசு, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அரசுதான், அனைத்துப் பள்ளிகளிலும்— இதுவரை நபார்டுமூலம் 1 முதல் 7, 8 திட்டக் காலங்களிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும்— பெஞ்சுகள், டெஸ்குகள் வழங்குவதற்கு ஏறத்தாழ 80 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கித் தந்திருக்கிறது. படிப்படியாக இப்போது நமது டான்சி நிறுவனத்தின்மூலமாக அந்த பெஞ்சுகள், டெஸ்குகள்

2008 நவம்பர் 13]

செய்யப்பட்டு அவை இப்போது பல பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவர் குறிப்பிடக்கூடிய பள்ளிகள் ஏதேனும் விடுபட்டுப் போயிருந்தால், என்னுடைய கவனத்திற்கு அவர் எழுதித் தருவார்களேயானால், நிச்சயமாக அந்தப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு திட்டத்தில் கிராமப்புறங்களில் இருக்கின்ற பல்வேறு கல்விக்கூடங்களுக்குச் சுற்றுச் சுவர் இல்லாமல் அங்கே பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. நாய்களும், பன்றிகளும், மற்ற மிருகங்களும் அங்கே சென்று வரும் நிலையில், அதைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு வழியில்லாமல் இருப்பதால், சுற்றுச் சுவர்களை அமைப்பதற்கு அரசு ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறதா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய இந்தக் கேள்வி, மிக முக்கியமான கேள்வி. பல பள்ளிகளிலே இன்றைக்குப் போதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் எல்லாம் கட்டப்பட்டாலும்கூட, சுற்றுச் சுவர்கள் இல்லை என்பது ஒரு பெரும் குறையாக உணரப்பட்டிருக்கிறது. எனவேதான், அக்குறையை நீக்குவதற்கு முதன்முறையாக நபார்டு வங்கிமூலம் ஆய்வகங்கள், வகுப்பறைகளுக்கு மாத்திரம் நிதியுதவி செய்தால் போதாது; பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கரிலே இருக்கக்கூடிய பெரிய பள்ளிகள் எல்லாம் தமிழகத்திலே இருக்கின்றன. பெரிய விளையாட்டு மைதானங்களை உள்ளடக்கி, பெரிய காம்பவுண்டு சுவர்களை எழுப்பவேண்டும் என்று சொன்னால், நிறைய நிதி தேவைப்படுகிறது. எனவே, நபார்டு வங்கியிலே இந்த ஆண்டு அதற்காக தனியாக ஒரு புரபோசல் கேட்டிருக்கிறோம். சுற்றுச் சுவர்கள் மாத்திரம் பள்ளிகளுக்குக் கொடுப்பதற்காக தனியாக ஒரு புரபோசல் நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய ஒப்புதலை நான் விரைவில் எதிர்பார்க்கிறேன். வந்தவுடன் கட்டப்படலாம். அதைப்போல நடுநிலைப் பள்ளிகள் அளவிலே கம்ப்யூட்டர்கள்

[2008 நவம்பர் 13

கொடுத்து இருக்கிறோம்—அவர் சொல்வது போல மிருகங்கள் எல்லாம் அங்கே வரக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தாலும்கூட, இப்போது நம்முடைய முதல்வர் கலைஞர் ஆட்சியிலே பல பள்ளிகளுக்கு கம்ப்யூட்டர்கள், டி.வி-க்கள், டி.வி.டி.-கள் என்று ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி அளவிலே நாம் கொடுத்து இருக்கிறோம்—எனவே, பாதுகாப்பு கருதியும் சுற்றுச் சுவர்கள் தேவைப்படுகின்றன. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பிலே, நடைபெறக்கூடிய இந்த கட்டுமானப் பணிகளிலும், சுற்றுச் சுவரை ஒரு கூறாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசுக்கும் வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வரக்கூடிய ஆண்டுகளில் நிச்சயமாக அதற்குரிய நிதியுதவிகளைப் பெற்று அவற்றை நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் மாநகராட்சியால் நடத்தப்படுகிற மாசாத்தியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஒரு மாணவி, அறிவியல் ஆசிரியர் இல்லாத ஒரு சூழலில், கணித ஆசிரியரும், ஆங்கில ஆசிரியரும் பாடம் நடத்தி 99 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார். அவர் ஒரு பாட்டாளியின் மகள். மாநகராட்சியால் நடத்தப்படும் இந்தப் பள்ளிகளில் அறிவியல் துறையில் மாணவர்களை ஊக்குவிக்க ஆய்வுக் கூடங்கள் அமைக்கவும், சிறப்புக் கவனம் எடுக்கவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பள்ளிகள் என்று மட்டுமல்ல; தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளிலே இப்படி ஆய்வகங்களை அமைப்பதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. நபார்டு வங்கியினுடைய திட்டத்தில் மாத்திரம் அல்லாமல், தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின்மூலமாக, அவர்களிடமிருந்து வரக்கூடிய நிதியையும் கூடுதலாகப் பெற்று, ஆய்வகங்கள் அமைக்கக்கூடிய பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு

2008 நவம்பர் 13]

வந்திருக்கிறோம். அந்த வகையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார் என்று சொன்னால், எந்தப் பள்ளிகளிலே ஆய்வகம் அமைக்க வேண்டுமோ அந்தப் பள்ளிகளிலேயும் அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இராஜஸ்தான் அரசுமூலமும் நபார்டு வங்கியின்மூலமும் கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தாலும் 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் மழை பெய்தால் மிகவும் ஒழுகுகின்ற பழையக் கட்டடங்களில் தங்கியுள்ள ஒரு சூழ்நிலை உள்ள காரணத்தால் கூடுதல் பள்ளி அறைகள் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்குக்கூட ஒரு கேள்வியிலே குறிப்பிட்டுச் சொன்னேன், தமிழகத்திலே இப்படிப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நிதி வசதி நம்மிடத்திலே நிறைய இருக்கிறது, வகுப்பறைகளைப் பொறுத்தமட்டிலே. ஆனால், இட வசதி இருக்கிறதா என்பதுதான் மிக முக்கியமான ஒரு பிரச்சினை. பல பள்ளிகளிலே அங்கு ஏற்கெனவே பழைய கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை இடித்துவிட்டு, புதிய பள்ளிக் கட்டடங்களை அங்கே கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, சில இடங்களிலே பொதுப் பணித் துறையிடத்திலே அனுமதி பெற்று அவற்றை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. பரங்கிப்பேட்டை பள்ளியிலே போதுமான இட வசதி இருந்தால்—6, 7, 8 ஆம் வகுப்புகளைப் பொறுத்தமட்டிலே அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் இந்த முறை ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு நிதியைப் பெற்றிருக்கிறோம்; எனவே, அங்கே இட வசதி இருக்கும் என்று சொன்னால்—நான் உடனடியாக அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து கூடுதல் கட்டடங்களை உடனடியாக அங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் லாலாபேட்டை, கிருஷ்ணராயபுரம், பாலவிடுதி, கடவூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் இல்லை. அதுமட்டுமல்லாமல், அங்கு கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச் சுவர் இல்லாமல் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரிதும் துன்பம் அடைகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருகின்ற நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து, அந்தப் பள்ளிகளுக்கு மேற்கண்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தப் பள்ளிகளுக்கு, வருகிற நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய பள்ளிகளில் முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கூடங்களுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்ற ஒரு நிலையில் N.C.D.C.—National Co-operative Development Corporation, அதேபோன்று நபார்டு, ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி போன்ற நிறுவனங்கள் தாராளமாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்துதர வேண்டும் என்று நிதியளிக்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்த இரண்டே முக்கால் ஆண்டுக் காலத்தில் எத்தனை புரபோசல்கள், கருத்துருக்கள் இதுபோன்ற நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டன என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவலை இந்த அவைக்கு அளிப்பாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, நபார்டு வங்கி மிகப் பெரிய அளவிலே அதற்கு உதவி செய்திருக்கிறது. அவர் இங்கே என்னிடத்திலே ஒரு விவரத்தைக் கேட்டிருக்கிறார். நபார்டு வங்கியினைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய தமிழகத்திலே 1 முதல் 8 பிரிவாக இதுவரை கொடுத்திருக்கிறார்கள். Phase 1 to Phase 8 வரை நம்முடைய மாநிலத்திலே அவர்கள் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். Phase 1-லே ரூபாய் 18.36 கோடி, இரண்டாவது கட்டத்திலே ரூபாய் 80.44 கோடி, 3-வது கட்டத்திலே ரூபாய் 83.74 கோடி, 4-வது கட்டத்திலே ரூபாய் 130.10 கோடி, 5-வது கட்டத்திலே ரூபாய் 102.3 கோடி, 6-வது கட்டத்திலே ரூபாய் 161.31 கோடி, 7-வது கட்டத்திலே ரூபாய் 131.69 கோடி என்று வரிசையாகக் கொடுத்திருக்கிறார்கள். இறுதியாக, இப்போது கொடுத்திருக்கக்கூடிய முன்மொழிவுகள் முன்பு எப்போதும் இல்லாத வகையிலே, ஏறத்தாழ 362 பள்ளிகளுக்கு 410 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டு Phase 8-லே நம்முடைய பள்ளியிலே ஆய்வகங்கள் கட்டுவதற்கு, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, அதுபோல கழிவறை வசதிகள் ஏற்படுத்துவதற்கு நபார்டு வங்கி நமக்கு உதவி செய்திருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

29—

மேம்பாலம்

***25868—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கோடுஅள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர்-சௌளாகரபட்டி இடையில் வேப்பாடி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?